**19.06.2026** **STC No. 44/2024** **PW1. சைனி கிளாஸ்டின்**

கடந்த 20.12.2024-ம் தேதி விசாரணை செய்யப்பட்ட நிலையில் இந்நீதிமன்ற 145(1) NI Act petition in M.P. 07/2026 dated 26.03.2026ன் படி மேற்படி சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 19.06.2026.**

குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு குறுக்கு விசாரணை

குற்றம் சுமத்தப்பட்டவர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்

1. குற்றம் சுமத்தப்பட்ட நபரை எனக்கு எத்தனை வருடங்களாக தெரியும் என்றால், 9 வருடங்களாக தெரியும். குற்றம் சுமத்தப்பட்ட நபரின் குடும்ப விவரங்கள் எனக்குத் தெரியுமா என்றால், தெரியும். நான் என்ன வேலை செய்து வருகிறேன் என்றால், வேலை எதுவும் செய்யவில்லை. வீட்டில் தான் உள்ளேன்.

2. தற்சமயம் நான் வாடகை வீட்டில் வசித்து வருகிறேன் என்றால், சரிதான். இன்று நான் ராதா என்பவருடன் தான் நீதிமன்றத்திற்கு வந்துள்ளேன் என்றால், சரிதான். நான் குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு எவ்வளவு ரூபாய் கடன் கொடுத்துள்ளேன் என்றால், 40 லட்சம் ரூபாய் கடன் கொடுத்தேன். அந்த பணத்தை எந்த denomination-ல் கொடுத்தேன் என்றால், 500 ரூபாய் நோட்டுகள் 80 கட்டுகள் கொடுத்தேன்.

3. எனக்கு வருமானம் எதுவும் இல்லை என்றால், சரிதான். ஆனால் எங்களுக்கு 1 கோடி ரூபாய்க்கு மேல் மதிப்புள்ள மீன்பிடி படகு உள்ளது. நான் ஆண்டுதோறும் வருமான வரி தாக்கல் செய்து வருகிறேனா என்றால், இல்லை. கடல் தொழில் செய்வதால் நாங்கள் அதனை கட்ட மாட்டோம். இதுவரை வருமான வரி செலுத்தியுள்ளேனா என்றால், இல்லை. நான் குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு கொடுத்த பணத்திற்கு எவ்வளவு வட்டி என்றால், மாதம் 2.5% வட்டி ஆகும்.

4. குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு கொடுத்த பணத்திற்கு மாதம் 2.5% வட்டி என்பதனை வழக்கறிவிப்பிலோ வழக்காவணங்களிலோ குறிப்பிட்டுள்ளேனா என்றால், இல்லை. நான் வட்டிக்கு பணம் கொடுப்பதற்கு உரிமம் வைத்துள்ளேனா என்றால்,

இல்லை. உரிமம் இல்லாமல் வட்டிக்கு பணம் கொடுப்பது சட்ட விரோதமானது என்பது எனக்குத் தெரியுமா என்றால், தெரியாது.

5. நான் உரிமம் இல்லாமல் குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு வட்டிக்கு பணம் கொடுத்து அதனை கேட்பதற்கு அந்த கடனாது ஒரு சட்டப்படி செயலுறுத்தக் கூடிய கடனாக பொறுப்பாகாது என்றால், அதனைப் பற்றி எனக்குத் தெரியாது. குற்றம் சுமத்தப்பட்ட நபர் வட்டி கொடுக்கவில்லை என்பதற்காக வட்டிக் கேட்டு வழக்கறிவிப்பு அனுப்பினேனா என்றால், இல்லை.

6. நான் குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு எவ்வாறு 40 லட்சம் ரூபாய் பணம் கொடுத்தேன், ரொக்கமாக கையில் பணம் கொடுத்தேன். நான் குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு பணம் கொடுத்ததற்கு எழுத்துப் பூர்வமான ஆவணங்கள் ஏதேனும் எழுதி பெற்றேனா என்றால், இல்லை. காசோலை மட்டும் தான் பெற்றேன்.

7. என்னிடம் 40 லட்சம் ரூபாய் உள்ளது என்ற நிதிநிலையை ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால், இல்லை. எனக்கு வேலை இல்லை என்பதால் 40 லட்சம் ரூபாய் என்பது ஒரு அதிகமான தொகை என்றால், சரிதான். எனது கணவருக்கு சொந்தமாக மீன்பிடி படகு உள்ளது.

8. நான் குற்றம் சுமத்தப்பட்ட நபரை தவிர்த்து வேறு யாருக்காவது கடன் கொடுத்துள்ளேனா என்றால், இல்லை. நான் குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு கடன் கொடுத்த தொகையை எழுதி வைத்துள்ளேனா என்றால், நான் Diary—ல் எழுதி வைத்துள்ளேன். அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை.

9. 40 லட்சம் ரூபாயை நான் எவ்வாறு தயார் செய்து கொடுத்தேன் என்றால், நகைகளை அடமானம் வைத்தும் மேலும் வங்கிக் கணக்கில் இருந்து பணத்தையும், எனது தெரிந்த நபர்களிடம் இருந்து வாங்கி தயார் செய்து குற்றம் சுமத்தப்பட்ட நபரிடம் கொடுத்தேன்.

10. 40 லட்சம் ரூபாயை தயார் செய்ததற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். ராதா என்பவருக்கும் குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கும் ஒரே ஊர் தான் என்றால், சரிதான். குற்றம் சுமத்தப்பட்ட நபர் ராதா என்பவரிடம் குழுவில் 1 லட்சம் ரூபாய் லோன் எடுப்பதற்காக பிணையாக கொடுத்த

காசோலையை வைத்து, அதனை ராதா என்னிடம் கொடுத்து நான் குற்றம் சுமத்தப்பட்ட நபர் மீது பொய்யாக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல.

11. எனக்கும் குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கும் நேரடியாக எந்த பணம் கொடுக்கல் வாங்கலும் கிடையாது என்றால், சரியல்ல. என்னிடம் காட்டப்படும் Ex.P1 காசோலையில் கையொப்பத்திற்கும் பூர்த்தி செய்யப்பட்ட விவரங்களுக்கும் மையில் வித்தியாசம் உள்ளதா என்றால், வித்தியாசம் இல்லை. எனது பெயர் சைனி என்றால், சரிதான்.

12. ராதாவிடம் பிணையாக கொடுத்த காசோலை நான் பூர்த்தி செய்த காரணத்தினால் தான் மைகளிலும் மற்றும் எழுத்துக்களிலும் வித்தியாசம் உள்ளது என்றால், இல்லை. ராதா மூலம் தான் இவ்வழக்கு காசோலை என்னிடம் வந்து, அதனை வைத்து நான் இவ்வழக்கு தாக்கல் செய்ததால் வழக்குமூலம் எழுவில்லை என்றால், சரியல்ல.

13. குற்றம் சுமத்தப்பட்ட நபர் ராதாவிடம் பிணையாக கொடுத்த கையொப்பம் மட்டும் செய்த வெற்றுக் காசோலையை நான் பொய்யாக நிரப்பி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல. என்னிடம் 40 லட்சம் ரூபாய் இருக்கும் என்ற நிதிநிலைமை காண்பிப்பதற்குரிய ஆவணங்களை தாக்கல் செய்யாத காரணத்தினால் இவ்வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால், சரியல்ல.

14. நான் ராதாவிடம் காசோலையை வாங்கிவிட்டு அதனை வைத்து பொய்யாக இவ்வழக்கை தாக்கல் செய்து விட்டு, அதில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. எனவே இவ்வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால், சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

**மறுவிசாரணை:**

மறுவிசாரணை இல்லை.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Judicial Magistrate,
Fast Track Court, Eraniel.